. 4 பக்கங்கள் . விலை ரூ. 5




# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936




www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 13.04.2026 • மலர் 04 • இதழ்: 102 • Edition : Nagercoil • 13.04.2026 • Vol : 04 • Issue : 102 • Page : 4 • Rs. 5/-

## தவெக ஆட்சியில்

# ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்

## கன்னியாகுமரியில் விஜய் வாக்குறுதி

கன்னியாகுமரி, ஏப்.13

'தவெக ஆட்சியில் நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல்ஏஐதொழில்நுட்ப பல்கலைக்கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக ஆட்சியில் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்' என தவெக தலைவர் விஜய் கூறினார். கன்னியாகுமரியில்



நடந்த பிரச்சாரக் கூட்டத்தில் உரையாற்றிய விஜய், "என் நெஞ்சில் குடியிருக்கும் கன்னியாகுமரி, காரைக்குடி மக்களுக்கு வணக்கம். அன்று காரைக்குடியில் என்னால் பேசமுடியாமல்போனது. இப்போது தவெக ஆட்சியின் சில திட்டங்களை அறிவிக்கிறேன். தவெக அரசு அமைந்தால், நம் ஆட்சியில் லஞ்சம் இல்லாமல் ஒவ்வொருவருக்கும் நலத்திட்டம் போய் சேரும். அதற்காக ஆதார் அட்டை போல தமிழகத்தில் ஒரு அடையாள அட்டை உருவாக்கப்படும். ஏஐ தரவுடன், லஞ்சம் இல்லாமல் நலத்திட்டங்கள் இந்த அட்டை மூலம் வழங்கப்படும். இதற்கு விண்ணப்பிக்க தேவையில்லை.

இப்போது அரசு அலுவலகங்களில் நமக்கு ஒரு வேலை ஆக வேண்டுமானால், பல்வேறு இழுத்தடிப்புகள் செய்கிறார்கள். இதற்கு காரணம் லஞ்சம் தான். இவ்வாறு வாங்கப்படும் லஞ்சம் அதிகாரிக்கு மட்டுமின்றி, அமைச்சருக்கும் செல்கிறது.

அதேபோல, தவெக ஆட்சியில் தமிழ்நாடு சேவை உறுதி திட்டம் உருவாக்கப்படும். ஆப் மூலமாக ஓட்டுநர் உரிமம் உள்ளிட்டவற்றை இடைத்தரகர் இல்லாமல், லஞ்சம் இல்லாமல் பெறலாம். பட்ஜெட்டை ஒரு ஆவணமாக மட்டும் நமக்குத் தெரியும். அந்த நிதி எங்கே செல்கிறது என நமக்கு தெரியாது. அது சிதம்பர ரகசியம் போல ஸ்டாலின் சார் ரகசியமாக உள்ளது.

தவெக ஆட்சியில், இணையதளம் மூலமாக அரசின் திட்டங்களுக்கு மக்கள் ஆலோசனை வழங்கலாம், பட்ஜெட்டை கண்காணிக்கலாம். நாட்டின் ஏஐ தலைநகராக தமிழ்நாடு மாறும். தமிழகத்தில் முதல் ஏஐ தொழில்நுட்பபல்கலைக் கழகம் உருவாக்கப்படும். தமிழகத்தில் ஏஐ நகரம் உருவாக்கப்படும். தவெக அரசின் கீழ் ஏஐ அமைச்சகம் உருவாக்கப்படும்.

தமிழகத்தில் நிதி இறையாண்மை கொண்ட மாநிலமாக மாற்றப்படும். நம் மாநிலத்தின்கடன் 10 லட்சம் கோடி ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது, இதனை மாற்ற வேண்டும். இதுபோன்ற ஆட்சி நமக்கு வேண்டும். இது வரை நம்மை ஏமாற்றிய அனுபவசாலிகளின் ஆட்சி போதும்' எனத் தெரிவித்தார்.

## குமரியின் இயற்கை வளங்கள், பாதுகாப்பு குறித்து வாய் திறக்காத விஜய்

### விசில் ஊத சொன்னதால் மக்கள் ஏமாற்றம்

2026 தமிழக சட்டமன்ற தேர்தலை ஒட்டி நேற்று கன்னியாகுமரியில் தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் மாவட்டத்திற்கு உள்ள 6 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்களையும் ஆதரித்து முதல்முறையாக கன்னியாகுமரி மகாதானபுரம் ரவு ண்டானா பகுதியில் பரப்புரை மேற்கொண்டார்.

இந்த பரப்புரையில் குமரி மாவட்டம் குறித்து வாய் திறக்காததால் தொண்டர்கள் அதிருப்தி அடைந்தனர். தமிழகத்தில் பொதுவான பிரச்சினைகள் பேசு பொருளாக இருந்தாலும் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு சில பிரச்சனைகள் பிரதான பிரச்சனைகளாக இருந்து வருகிறது.

அந்த வகையில் குமரி மாவட்டத்தில் தினந்தோறும் பொதுமக்கள் அனுபவித்து வரும் பிரச்சனைகளான கனிமவள சூறையாடல், அன்றாடம் கனிம வள லாரிகளால் ஏற்படும் விபத்துகள் குறித்தும், கேரள கழிவுகளை குமரியில் கொட்டுவது குறித்தும், சுற்றுலாத்தலமான கன்னியாகுமரியை மேம்படுத்துவது குறித்தும், வளர்ச்சி திட்ட பணிகள் குறித்தும் எந்த ஒரு அறிவிப்பையும் அறிவிக்காமல் அனைவரையும் விசில் ஊதச் சொல்லி விட்டு தனது பரப்புரையை நிறைவு செய்ததால் 12 மணி முதல் வெயிலில் 4 மணி வரை அவரின் வருகைக்காக காத்திருந்த தொண்டர்கள் மற்றும் ரசிகர்கள் குமரி மாவட்ட மக்களின் பிரச்சனைகளை குறித்து பேசுவார் என எதிர்பார்த்த நிலையில் கன்னியாகுமரி மாவட்ட மக்களை வெறும் விசில் மட்டுமே ஊத சொன்னது பெரும் ஏமாற்றத்தை ஏற்படுத்தி உள்ளது.

## "ஸ்டாலின் கொண்டு வந்த திட்டங்களை பல மாநில முதல்வர்களும் பின்பற்றுகின்றனர்"

### வைகோ வாக்குசேகரிப்பு



திருவாரூர், ஏப். 13

திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் நடைபெற்ற பிரச்சாரப் பொதுக்கூட்டத்தில் மதிமுக பொதுச் செயலாளர் வைகோ கலந்துகொண்டு, நன்னிலம் தொகுதி திமுக வேட்பாளர் முகமது முபாரக்கை ஆதரித்து பிரச்சாரம் செய்தார். அப்போது திருவாரூர் திமுக வேட்பாளர் பூண்டி கலைவாணனும் பங்கேற்று வாக்கு சேகரித்தார்.

அப்போது வைகோ பேசியதாவது: தஞ்சைசோழ மண்டலத்தை காப்பதற்காக, தமிழ்நாட்டின் வளங்களைப் பாதுகாப்பதற்காக நான் திமுகவை ஆதரித்து வாக்கு சேகரிக்க வந்திருக்கின்றேன். சமத்துவ, சகோதரத்துவ நாடாக தமிழகத்தை ஆண்ட ஸ்டாலின் ஆட்சி மீண்டும் அமைய வேண்டும்.

பல மாநில முதல்வர்கள் கலந்துகொண்ட இந்தியா கூட்டணி கூட்டத்தில், தமிழக முதல்வர் ஸ்டாலின் நிறைவேற்றிய திட்டங்களை பின்பற்ற விரும்புவதாக தெரிவித்ததாக அந்தக் கூட்டத்தில் பங்கேற்றவர்கள் குறிப்பிட்டனர். அந்த அளவுக்கு திறமையான ஆட்சியை நடத்தி வருகின்றார். திராவிட இயக்கத்துக்கு எந்தக் கேடும் நேராமல் பார்த்துக் கொள்வது என் கடமை என்றார்.

## குமரியில் பிரதமர் மோடி பிரச்சாரம் செய்வதால் பாரதிய ஜனதா வெற்றி உறுதி

### வேட்பாளர் எம் ஆர் காந்தி நம்பிக்கை

நாகர்கோவில்,ஏப் 13

நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பாரதிய ஜனதா கட்சியின் வேட்பாளர் எம் ஆர் காந்தி எம்எல்ஏ நேற்று நாகர்கோவில் பகுதியில் முக்கிய பிரமுகர்களை சந்தித்தும் வீடு வீடாகவும் சென்று வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பாரதிய ஜனதா கட்சியினர் மற்றும் கூட்டணி அதிமுக கட்சியினர் அவருக்கு பிரமாண்ட வரவேற்பு அளித்தனர். பிரச்சாரத்தின் போது பேசிய வேட்பாளர் எம் ஆர் காந்தி, _

கடந்த 5 ஆண்டுகளாக தொகுதிக்கு உட்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் சட்டமன்ற தொகுதி நிதி ஒதுக்கீடு செய்து பல்வேறு பணிகள் நடந்துள்ளதாக கூறினார். வகுப்பறைகட்டிடங்கள், ஆய்வகங்கள் உள்ளிட்ட பல்வேறு அரசு கட்டுமான பணிகள் கட்டியிருக்கிறேன் என பேசினார். மேலும் இந்த தொகுதி மக்களுக்கு தேவையான திட்டங்களை



பெற்றுதரமீண்டும்தாமரை சின்னத்திற்கு வாக்குகளை தாருங்கள்.

வருகிற 15ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி நாகர்கோவில் பிரச்சாரம் செய்ய உள்ளார். அவர் பிரச்சாரத்தில் பொதுமக்கள் திரளாக கலந்து கொள்ள வேண்டும். மோடியின் பிரச்சாரம் நாகர்கோவில் தொகுதியில் பாரதிய ஜனதாவின் வெற்றியை உறுதி செய்யும் என பேசினார்.

முன்னதாக நான் தேசிய ஜனநாயககூட்டணி செயல் வீரர்கள் கூட்டம் நாகர்கோவில் இருளப்பபுரத்தில் உள்ள ஒரு திருமண மண்டபத்தில் நடந்தது. இந்த கூட்டத்திற்கு நாகர்கோவில் சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர் தேவ் தலைமை தாங்கினார். கடந்த 2021 ஆம் ஆண்டு நடந்த சட்டமன்றத் தேர்தலில் நாகர்கோவில் தொகுதியில் எம் ஆர் காந்தியை வெற்றி பெறச் செய்தது போன்று தற்போதைய தேர்தலிலும் அவரை அதிக வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்து தொகுதியை தக்க வைக்க வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது இந்த கூட்டத்தில் பாரதிய ஜனதா நிர்வாகிகள் மற்றும் அதிமுக நிர்வாகிகள் உட்பட கூட்டணி கட்சியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## கடையநல்லூர் சட்டமன்ற தொகுதி தேசிய ஜனநாயக கூட்டணியின் அஇஅதிமுக வேட்பாளர்

தென்காசி, ஏப்.13

தென்காசி வடக்கு மாவட்ட கழக செயலாளர் கிருஷ்ணமுரளி என்ற குட்டியப்பா கடையநல்லூர் நகர் பகுதியான மேல கடையநல்லூர், பேட்டை, மாவடிக்கால், செவல்விளை, கிருஷ்ணாபுரம் உள்ளிட்ட பல பகுதிகளில் வீதி வீதியாக சென்று

தேர்தல் பரப்புரை செல்லும் இடங்களில் பொது மக்கள் வைக்கின்ற கோரிக்கைவிடுக்குறீர்கள் நீங்கள் என்னை பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற செய்வீர்கள் என்ற நம்பிக்கை உள்ளது

இதே போல தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் அனைவரும் வெற்றி பெற்று எடப்பாடியார்முதலமைச்சராக அமர்ந்த உடனே உங்களது கோரிக்கைகள் நிச்சயமாக நிறைவேற்றி தரப்படும். தமிழகம் கொள்ளை கூட்ட கும்பலின் பிடியில்




இருந்து விடுபட்டு விவசாயி முதல்வராக அயராது பாடுபடுவோம் அதிமுக வின் தேர்தல் அறிக்கை என் ப து நிறைவேற்றக்கூடிய தேர்தல் அறிக்கை கழக பொதுச்செயலாளர் முதலமைச்சராக அமர்ந்த உடன் எந்த பாகுபாடும் இன்றி அ னை த் து குடும்பங்களுக்கும் ரூ 10,000 உங்கள் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும் குளிரசாதனபெட்டி உள்ளிட்டபலதிட்டங்கள் அனைவருக்கும் கிடைத்திட வெற்றி சின்னமான இரட்டை இலை சின்னத்திற்கு வாக்குகள் வழங்கிட வேண்டி கேட்டுக் கொள்கிறேன் என்று பேசினார். இந்நிகழ்வின் போது கழக நிர்வாகிகள் உட்பட தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## தி.மு.க.வை ஆட்சியில் இருந்த அகற்ற இருவரும் இணைந்து வந்துள்ளோம் தஞ்சாவூரில் டிடிவி தினகரன் பேச்சு

தஞ்சாவூர் ஏப்ரல் 13.

தி.மு.க.வை ஆட்சியில் இருந்து அகற்ற கருத்து வேறுபாடுகளை மறந்து இருவரும் இணைந்து வந்துள்ளோம் என டி டி வி தினகரன் கூறினார்

தஞ்சாவூர் ரெயிலடியில் நடந்த அ.தி.மு.க .தலைமையிலான தேசி ய ஜனநாயக கூட்டணி வேட்பாளர்கள் அறிமுகம் கூட்டத்தில் அ.ம. மு க . பொதுச்செயலாளர் டி டி வி தினகரன் பேசியதாவது:

இன்றைக்கு நாங்கள் ஒரே வேனில் ஒன்றாக நின்று பிரச்சாரம் செய்வதை பார்த்து சில பயத்தில் உச்சத்தில் உள்ளார்கள் .நாங்கள் அண்ணன், தம்பி சண்டையிட்டது உண்மை தான். ஏதோ பிரச்சனை செய்தோம். சண்டையிட்டோம். தற்போது எல்லாம் ஒன்றாக வந்துள்ளோம். தமிழ்நாடு முழுவது ம் எங்கு சென்றாலும் எங்களை வரவேற்கிறார்கள். சென்னையில் இருந்து கன்னியாகுமரி வரை நம் தொண்டர்களும் ,நிர்வாகிகளும், ஒன்றாக இணைந்து விட்டனர் நாங்கள் திமுக என்கிற தீய சக்தி யை ஆட்சியில் இருந்து அகற்ற கருத்து வேறுபாடுகள் மறந்து வந்துள்ளோம் . தமிழ்நாட்டில் ஜெயலலிதாவின் ஆட்சி, அண்ண ன் எடப்பாடி உருவாக்க தேசிய ஜனநாயக கூட்டணி யாக நாங்கள் இணைந்து உள்ளோம் .

டெல்டா, தி.மு.க.வின் கோட்டை என்கிறார்கள். இது ஜெயலலிதா வின் கோட்டையாக இருந்தது. இடையில் நாங்கள் கோட்டை விட்டுட்டோம் . இப்போது உறுதி யாக இதை ஜெயலலிதாவின் கோட்டை என்பதை நீங்கள் நிரூபிக்க வேண்டும்.

காரணம், ஜெயலலிதா காவிரி பிரச்சினையில் எப்படி எல்லாம் போராடினார்கள். காவேரி தீர்ப்பை பெற எவ்வளவு போராட்டம் செய்தார்கள் என்பது உங்களுக்கு தெரியும் .அதே போல அண்ணன் எடப்பாடி பழனிச்சாமி முதலமைச் சராக இருந்த போது நமது டெல்டா பகுதியை பாதுகாக்கப்பட்ட விவசா ய மண்டலமாக உருவாக்கினார்.

வைரமே கிடைத்தாலும் எங்களு க்கு தேவையில்லை ,நாங்கள் விவசாயம் தான் செய்ய வேண்டும் என்ற நமது பகுதி விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று அன்றைக்கு இந்த பகுதியை பாதுகாக்கப் பட்ட விவசாய மண்டலமாக அறிவிக்கப் பட்டதால் தான் இங்கே நமது விவசாயிகள் பாதுகாக்கப்படுகிறார்கள்.

எப்போதெல்லாம் அதிமுக ஆட்சிக்கு வந்ததோ அப்போதெல் லாம் தஞ்சை



பகுதிக்கு பல்வேறு திட்டங்கள்கிடைத்திருக்கிறது. எம்ஜிஆர் ஆட்சி காலத்தில் தமிழ்பல்கலைக்கழகத்தை உருவாக்கி னார் .ஜெயலலிதா ஆட்சிக் காலத் தில் 8வது உலகத்தமிழ் மாநாட்டை நடத்தினார்

பிரதமர் மோடி முதன்முதலாக அறிவித்த ஸ்மார்ட் சிட்டி திட்டத்தில் தஞ்சாவூர் இருந்ததற்கு ஜெயலலிதா தான் காரணம். இதன் மூலம் ரூபாய்1,000 கோடியில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளது. எடப்பாடி பழனிச்சாமியின்நான்கரைஆண்டு கால ஆட்சியில் பல சாதனைகள் செய்யப்பட்டுள்ளது

ஆனால் இன்றைக்கு மு க ஸ்டாலின் ,உதயநிதியும் டெல்டாக் காரர்கள் என்கிறார்கள். அவர்கள் உல்டா காரர்கள்தான்.இந்த முறை தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 தொகுதிகளிலும் தேசியஜனநாயககூட்டணி வேட்பாளர்கள் வெற்றி பெற வாக்களிக்க வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.




தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

'தின தமிழ் ' செய்தி எதிரொலி:

# நோயின் பிடியில் தவித்து வாடும் குடும்பத்தினருக்கு நாகர்கோவில் ரோட்ரி கிளப் சார்பில் நல உதவி



களியக்காவிளை, ஏப்.13

களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சிக்குட்பட்ட ஒற்றப்பன விளை, கரியாறவிளை பகுதியை சார்ந்தவர் மணி ( 60 ) இவரது மனைவி செல்வின் மேரி (51). தம்பதிகளுக்கு இரண்டு ஆண் பிள்ளைகள் உள்ளனர், மணி சவுதி அரேபியாவில் பணிபுரிந்து வந்தார். சுமார் 20 வருடத்திற்கு முன் உடல் நிலை சரியில்லாத நிலையில் ஊருக்கு வந்து கூலி வேலை செய்து வந்தார். சுமார் கடந்த 18 வருடங்களாக பக்க வாத நோயால் பாதிக்கப்பட்டு வீட்டில் முடங்கியுள்ளார். இவரது மனைவி செல்வின் மோரி குடும்ப சூழ்நிலையை கருத்தில் கொண்டு முறுக்கு சுற்றும் கூலி வேலைக்கு சென்று தனது கணவர் மற்றும் இரண்டு பிள்ளைகளை பாதுகாத்து வந்தார்.


இவர்களின் இரண்டாவதுமகன் றோஜித் ஜோய் (21) திருத்துவபுரம் பகுதியில் அமைந்துள்ள தனியார் பள்ளியில் +2 வரை கல்வி கற்றுள்ளார். தொடர்ந்து திருவனந்தபுரத்தில் அனிமேஷன் கல்வி கற்றுள்ளார். தற்போது இரண்டு கிட்னிகள் மற்றும் லிவர் பாதிக்கப்பட்டுள்ளார், தற்போது வேலூரில் அமைந்துள்ள ஆஸ்பத்திரியில் சிகிட்சை பெற்று வருகி.றார்,

இவருக்கு கிட்னியுடன் லிவர் மாற்றி வைத்து சிகிட்சை அளிக்க 13 லட்சம் ரூபாய் தேவைப்படுகிறது. இத்தனை ரூபாய் செலவுசெய்யமுடியாமல் மணி மற்றும் செல்வின் மேரி குடும்பத்தினர் தவித்து வருகின்றனர்.

இத் தகவல் தின தமிழ் பத்திரிகையில் செய்தியாக வெளியிடப்பட்டிருந்தது. இதனை பார்த்த நாகர்கோவில் ரோட்டிரி கிளப் சார்பில் ரொட்டேரியன் அக்னி டி.எம். டி கம்பெனியில் மேனேஜர் ஜெயகிருஷ்ணன், மற்றும் அரவது நன்பர்களான ஆல்ட்ரின் சேவியர், கிருஷ்ணகுமார், ராஜாராம், சதாசிவம் உள்ளிட்டோர் சேர்ந்து பாதிக்கப்பட்ட மணியின் குடும்பத்தாருக்கான சிகிச்சைக்கன நல உதவியை அவரின் வீட்டிற்கே சென்று நேரடியாக வழங்கினார்கள். இந்த நிகழ்ச்சியில் திருத்துவபுரம் பகுதியை சார்ந்த சமூக ஆர்வலர்கள் கலந்து கொண்டார்.

கன்னியாகுமரி

# கடலில் நாட்டுப்படகுகள் மூலம் தேர்தல் விழிப்புணர்வு



நாகர்கோவில், ஏப்.13

சட்டமன்ற தொகுதிகளுக்கான பொதுத்தேர்தல் வரும் ஏப்ரல் மாதம் 23ம்தேதி அன்று ஒரே கட்டமாக நடைபெறவுள்ளது. இந்த தேர்தலில் பொதுமக்கள் அனைவரும் 100 சதவீதம் வாக்களிப்பதன் அவசியத்தை வலியுறுத்தி தேர்தல் ஆணையத்தின் முறையான வாக்குப்பதிவு விழிப்புணர்வு மற்றும் கல்வித் திட்டத்தின் கீழ் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மாவட்டத்தின் பல பகுதிகளில் நடைபெற்று வருகிறது.

அதன்ஒருபகுதியாக கன்னியாகுமரி அலங்கார உபகார மாதா ஆலயத்திற்கு அருகில் உள்ள கடற்கரை பகுதியில் ஏராளமான நாட்டுப்படகுகள் ஒன்றிணைக்கப்பட்டு, 'VOTE' என்ற வடிவில் நிறுத்தப்பட்டு, தேர்தல் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இது கடற்கரைக்கு வந்திருந்த சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களிடையே பெரும் ஈர்ப்பை ஏற்படுத்தியது.

இந்த நிகழ்ச்சியில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி பொது பார்வையாளர் சுபஸ்ரீ நந்தா தலைமையில் அலுவலர்கள், மீனவர்கள், மீனவ பிரதிநிதிகள், பொதுமக்கள் உள்ளிட்ட அனைவரும் வாக்காளர் உறுதிமொழி ஏற்றுகொண்டார். துணை இயக்குநர் மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கோபிநாத், செயற்பொறியாளர் மீன் பிடித்துறைமுக கோட்டம் பிரேமலதா, உதவி இயக்குநர் தீபா, மீனவர்கள், மீனவ பிரதிநிதிகள், பொதுமக்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி

# காங்கிரஸ் வேட்பாளர் டாக்டர் செல்லகுமாருக்கு ஆதரவாக கை சின்னத்தில் வாக்குகள் சேகரித்த காங்கிரஸ் மற்றும் திமுகவினர்



கிருஷ்ணகிரி ஏப் 13

முன்னாள் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி உறுப்பினர் துரை என்கின்ற துரைசாமி, தலைமையில், கிருஷ்ணகிரி சட்டமன்ற வேட்பாளர் செல்லகுமாரை ஆதரித்து கை சின்னத்தில் வாக்களிக்க பொதுமக்கள் மற்றும் வியாபாரிகளிடம் காங்கிரஸ் மற்றும் திமுகவை சேர்ந்த நிர்வாகிகள் வாக்குகள் சேகரித்தனர். மேலும் துண்டு பிரசுரங்களை கிருஷ்ணகிரி நகரின் பல்வேறு பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கி மீண்டும் திமுக ஆட்சியை அமைந்திட அனைவரும் அதன் கூட்டணி கட்சியான காங்கிரஸ் வேட்பாளரான டாக்டர் செல்லக்குமாருக்கு கை சின்னத்தில் வாக்களிக்க வேண்டும் என்றும், திமுக அரசின் சாதனைகளை விளக்கியும், எதிர்வரும் காலங்களில், திமுகவின் தேர்தல் அறிக்கையும் விளக்கி கிருஷ்ணகிரி நகர வியாபாரிகளிடமும் பொதுமக்களிடமும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். இந்த வாக்கு சேகரிப்பில் நிகழ்ச்சியில் கூட்டணி கட்சியை சேர்ந்த திமுக மாவட்ட வர்த்தக அணி துணை தலைவர் ராஜசேகர், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் ஜான் டேவிட், மாவட்ட துணை தலைவர் காங்கிரஸ் சிறுபான்மை பிரிவு மாவட்டத் துணைத் தலைவர் முஸ்தாக் அகமது, நெசவாளர் அணி துணை அமைப்பாளர் திருமலை, சிறுபான்மை பிரிவு துணை அமைப்பாளர் ஜெயராஜ், வினோத், சேகர், பிரதீப், உள்ளிட்ட ஏராளமான கலந்து கொண்டனர். இந்த வாக்கு சேகரிப்பின்போது கிருஷ்ணகிரி நகர மக்கள், வேட்பாளர் செல்லகுமாருக்கு கை சின்னத்தில் வாக்களிக்க ஆர்வமுடன் இருப்பதாக மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.

சமூக ஊடகங்கள் வாயிலாக

# தேர்தல் விதிமீறுபவர்கள் மீது நடவடிக்கை; கலெக்டர் தகவல்



நாகர்கோவில், ஏப்.13

கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா தனது செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் வரும் 23.04.2026 அன்று நடைபெற உள்ளது. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதி வேட்பாளர் பட்டியல் 09.04.2026 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

தொடர்ந்து 6 சட்டமன்ற தொகுதி வேட்பாளர்கள், அரசியல் கட்சியினர், சமூகஊடகவியலாளர்களின் செயல்பாடுகள், சமூகஊடக கணக்குகளான டிவிட்டர், முகநூல், இன்ஸ்டாகிராம், யூ டியூப் உள்ளிட்டவைகளை மாவட்ட ஆட்சியர் அலுவலக தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் செயல்பட்டு வரும் சமூக ஊடக கண்காணிப்புகுழுவினரால்கண்காணிக்கப்பட்டுவருகிறது.

எனவே சமூக வலைதளங்களில் பதிவிடப்படும் தகவல்கள் உண்மையாக இருக்கும் நிகழ்வில் மட்டும் பகிரப்பட வேண்டும்.

மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தினால் வெறுப்புப் பேச்சு, தவறான தகவல், போலிச் செய்திகள் வெளியிடுபவர்களின் மீது மூன்று ஆண்டுகள் வரை நீட்டிக்கக்கூடிய சிறைத்தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும். கருத்துக் கணிப்புகள், தேர்தல் முடிவுகளைப் பரப்புவதையும் தடை செய்கிறது.

மத உணர்வுகளைப் புண்படுத்தி , சாதி, சமூகம் அல்லது மொழி ஆகியவற்றின் அடிப்படையில் இந்திய குடிமக்களின் வெவ்வேறு வகுப்பினரிடையே பகைமை அல்லது வெறுப்பு உணர்வுகளை ஊக்குவித்தல் அல்லது ஊக்குவிக்க முயற்சித்தல் ஆகியவற்றை மேற்கொள்பவர்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். என கூறியுள்ளார்.

மணப்பாறை அருகே

# உயிரிழந்த நிலையில் வாலிபர் சடலம்

மணப்பாறை அருகே வாகைகுளம் விஸ்தரிப்பு பகுதியைச் சேர்ந்த முத்து கண்ணன் (38) என்பவர் நேற்று மாலை சுமார் 05.30 மணியளவில் வளநாடு கைகாட்டியில் உள்ள சின்னகோனார்பட்டி பிரிவு சாலையில் ஏழுமலை என்பவரது சலூன் கடை அருகில் சாலையோரம் இறந்த நிலையில் கிடந்தார். இதுகுறித்து தகவல் அறிந்த வளநாடு போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று விசாரணை மேற்கொண்டனர்.

இறந்தவரின் உடலைக் கைப்பற்றி, பிரேத பரிசோதனைக்காக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

திருச்சி ஏர்போர்ட்டில்

# போலி பாஸ்போர்ட்டில் வந்த பயணி கைது




திருச்சி, ஏப். 13

திருச்சி விமான நிலையத்தில் கோலாலம்பூரில் இருந்து வந்த பயணிகளை வான் நுண்ணறிவு போலீசார் சோதனை செய்தனர். அப்போது, ரவிச்சந்திரன் என்ற பயணிபோலிஆவணங்களைசமர்ப்பித்துபாஸ்போர்ட் பெற்றது தெரியவந்தது. இதை அடுத்து அவரிடம் விமான நிலைய அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

திருச்சி

# ஏர்போர்ட் விஜய்யின் தனி விமானத்தில் சோதனை



திருச்சி, ஏப். 13

திருச்சி விமான நிலையத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த தமிழக வெற்றி கழக தலைவர் விஜயின் தனி விமானத்தை தேர்தல் பறக்கும் படை அதிகாரிகள் சோதனை செய்தனர். தேர்தல் நேரம் என்பதால் அனைத்து வாகனங்கள் மற்றும் தனி விமானங்களை சோதனை செய்வது வழக்கம் தான் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடியில் 85 வயது மேற்பட்டவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வாக்கு செலுத்துவதற்காக, தபால் வாக்கு பெட்டிகளை அந்தந்த பகுதிகளுக்கு அனுப்பி வைத்தனர்.

# மக்களுக்கான நம்பகத்தன்மை கொண்ட ஆட்சி திமுக ஆட்சி

## விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதியில் திமுக வேட்பாளர் வாக்கு சேகரிப்பு



விளாத்திகுளம் ஏப் 13

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்றத் தொகுதியில் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திமுக வேட்பாளராக உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடும் தற்போதைய விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்கண்டேயன் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பனையூர் தெற்கு, பனையூர்,ஸ்ரீ வைகுண்ட பெருமாள்புரம், கல்லூரணி, சிப்பிகுளம், வைப்பார்,கீழவைப்பார், முகமதுபுரம், கலைஞானபுரம், பெரியசாமிபுரம், வேம்பார் உள்ளிட்ட பகுதிகளில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது பேசிய மார்கண்டயேன் மக்களுக்கான நண்பகத் தன்மை கொண்ட ஆட்சி திமுக ஆட்சி, திமுக திராவிட மாடல் ஆட்சியில் காலை உணவு திட்டம்,மகளிர் விடியல் பேருந்து, இல்லம் தேடி கல்வி, நலம் காக்கும் ஸ்டாலின், புதுமைப்பெண் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், மகளிர் உரிமைத் தொகை உள்ளிட்ட எண்ணில் அடங்காத ஏராளமான திட்டங்களை திராவிட மாடல் ஆட்சி மக்களுக்கு அள்ளிக் கொடுத்துள்ளது, அதேபோல் விளாத்திகுளம் தொகுதியில் அங்கன்வாடி,நியாய விலைகடை, பயணியர் நிழற்குடை, பேவர் பிளாக் சாலை, கிராமப்புறங்களில் தார் சாலை,சாலை மேம்பாலங்கள், குடிநீர் நீர்த்தேக்க தொட்டி என பல்வேறு நலத்திட்ட பணிகளை கடந்த ஐந்தாண்டுகளாக மக்களுக்கு செய்துள்ளேன் என்று கூறி வாக்கு சேகரித்தார்.

இந்த நிகழ்வில் திமுக விளாத்திகுளம் மேற்கு ஒன்றிய செயலாளர் அன்புராஜன்,கிழக்கு ஒன்றிய செயலாளர் மாரிமுத்து,இளைஞர் காங்கிரஸ் கட்சி தலைவர் ஜான் பிரிட்டோ மற்றும் திமுக நிர்வாகிகள் கூட்டணி கட்சி நிர்வாகிகள் என பலர் கலந்து கொண்டனர்.

# தக்கலை அரசு பஸ் நிலையத்தில் விதிகளை மீறும் கேரளா அரசு பஸ்கள்

## மாவட்ட கலெக்டர், எஸ்பி நடவடிக்கை எடுப்பார்களா? பொதுமக்கள் எதிர்பார்ப்பு




தக்கலை, ஏப்.13

தக்கலை சந்திப்பில் தேசிய நெடுஞ்சாலையோரம் காமராஜர் அரசு பஸ் நிலையம் கடந்த பல ஆண்டுகளாக இயங்கி வருகிறது. பழைமையான இந்த பஸ் நிலையம் தற்போது தமிழ்நாடு அரசு கலைஞர் நகர்புற மேம்பாடு திட்டத்தில் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, ரூ.6.39 கோடி மதிப்பில் பணி தொடங்கப்பட்டது.

தற்போது பணிகள் முடிந்து கடந்த மார்ச் மாதம் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் தக்கலை அரசு பஸ் நிலையத்தை காணொளி காட்சி மூலம் தொடங்கி வைத்தார். தற்போது தேசிய நெடுஞ்சாலையோரம் சகல வசதிகளுடன் இந்த பஸ் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் அனைத்து பஸ்களும் இந்த பஸ் நிலையத்திற்குள் பயணிகளை ஏற்றி இறக்கி செல்வது வழக்கம். இதனால் தக்கலை பகுதியில் போக்குவரத்து நெரிசல் குறைவாக காணப்பட்டு வந்தது.

கேரளா அரசு பஸ்களும் நிலையத்திற்குள் பயணிகளை ஏற்றி செல்வது வழக்கம். ஆனால் தற்போது குறிப்பிட்ட சில கேரள அரசு பஸ் டிரைவர்கள்பஸ்நிலையம்உள்ளே செல்லாமல் தேசிய நெடுஞ்சாலையில் நின்று பயணிகளைஏற்றிஇறக்கி செல்லும் வழக்கம் தொடர்கிறது. இதனால் அந்த பகுதியில் மிகுந்த போக்குவரத்து நெருக்கடி மற்றும் விபத்துக்கள் ஏற்பட்டு வருகிறது.

இந்த நிலையில் நேற்று மீண்டும் இதே போல் ஒரு குறிப்பிட்ட கேரள அரசு பஸ் டிரைவர் சாலை ஓரம் பஸ்சை நடத்தி ஆட்களை ஏற்றி இறக்கினார். இதை பார்த்த அந்த பகுதியில் வாகனங்களை ஓட்டும் டிரைவர் ஒருவர் சென்று அந்த கேரளா அரசு பஸ் டிரைவரை தட்டி கேட்டார்.

ஆனால் அந்த கேரளா அரசு பஸ் டிரைவர் தரக்குறைவாக பேசிவிட்டு பஸ்சை எடுத்துச் சென்றது என்பது தெரிய வந்தது. தற்போது இந்த சம்பவம் வீடியோவாக சமூக வலைத்தளங்களில் பரவி வருகிறது.

குமரி மாவட்டத்துக்கு வரும் கேரளாவை சேர்ந்த வாகனங்கள் எந்த அரசு விதிமுறைகளையும் மதிப்பதில்லை என்ற புகார்கள் ஏற்கனவே உள்ளது. தட்டிக் கேட்கும் நபர்களையும், போலீஸ் காரர்களையும் எதிர்த்து நின்று கேள்வி கேட்கும் சம்பவங்களும் காலகாலமாக நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் தேசிய நெடுஞ்சாலை சாலையோரம் அமைந்துள்ள பஸ்நிலையத்தில் கேரளா பஸ்கள்உட்படஅனைத்து பஸ்களும்உள்ளேசென்று பயணிகளைஏற்றி இறக்கி செல்ல விதிமுறைகள் இருந்தும், குறிப்பிட்ட சில

கேரளா அரசு பஸ் டிரைவர்கள் காழ்ப்புணர்ச்சி காரணமாகவும், குமரி மாவட்டத்தை ஒரு பொருட்டாக மதிக்காமலும் இதுபோன்று தகாத செயல்களை செய்வதாக அப்பகுதி மக்களுடைய பரபரப்பாக பேசப்படுகிறது.

எனவே கன்னியாகுமரி மாவட்ட கலெக்டர் மற்றும் மாவட்ட எஸ்பி இந்த விஷயத்தில் தீவிரமாக தலையிட்டு கேரளா மாநில அரசு அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்து, இதுபோன்று அத்துமீகம் கேரளா அரசு பஸ் டிரைவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை எழுந்துள்ளது.

# நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு கூடுதல் வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு



நாகர்கோவில், ஏப்.13

கன்னியாகுமரி மாவட்டத்தில் 6 தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஏற்கனவே பிரிக்கப்பட்டு அந்தந்தத் தொகுதி வாரியாக அனுப்பப்பட்டு,

அந்தந்த வட்டாட்சியர் அலுவலகங்களில் பாதுகாப்பாக வைக்கப்பட்டு ள் ள ன . வேட்புமனுத் தாக்கல் நி றை வ டை ந் த தை த் தொ டர்ந்து, மாவட்டத்தின் ஆறு சட்டமன்றத் தொகுதிகளிலும் மொத்தம் 85 வேட்பாளர்கள் போட்டியிட உள்ளார்கள்.

இதில் நாகர்கோவில் தொகுதியில் மட்டும் 20 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

வழக்கமாக ஒரு வாக்குப்பதிவு இயந்திரத்தில் 15 வேட்பாளர்களின் சின்னங்கள் மட்டுமே பொருத்த முடியும் (ஒரு பொத்தான் நோட்டாவிற்காக ஒதுக்கி வைக்கப்படும்).

நாகர்கோவில் தொகுதியில் 20 வேட்பாளர்கள் இருப்பதால், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதியில் 322 வாக்குச்சாவடிக்கும் தலா இரண்டு வாக்குப்பதிவு இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து, நா க ர் கோ வி ல் ச ட் ட தொகுதிக்குத் தேவையான 386 கூடுதல் மின்னணு இயந்திரங்கள் ஒதுக்கீட செய்து, அனுப்பும் பணி நடைபெற்றது.

இதை மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகு மீனா பார்வையிட்டு ஆய்வுசெய்தார். மாவட்ட சிறப்பு வருவாய் அலுவலர் தமிழரசி, நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் எஸ். காளீஸ்வரி, மாவட்ட ஆட்சியரின் நேர்முக அலுவலர்கள் சுகிதா (பொது), ரோஷன் பேகம், அலுவலர்கள், பணியாளர்கள், உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.

## கோவையில்

# மெஜஸ்டின் ஜுவல்ஸ் ஷோரூமை திறந்து வைத்த ஸ்ரீதேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் சிவ கணேஷ்



கோவை ஏப்:13

கோவை கிராஸ் கட் சாலையில் மெஜஸ்டின் ஜுவல்ஸ் 3 மாடியில் 3 வது கிளை திறப்பு விழா ஶ்ரீ தேவி டெக்ஸ்டைல்ஸ் உரிமையாளர் பி சிவகணேஷ், மெஜஸ்டின் ஜுவல்ஸ் உரிமையாளர் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். இதில் தங்கம், வைரம், வெள்ளி, ஆகியவை புது கலெக்சன்னுடன் பொதுமக்களுக்கு ஏற்ற விலையில் உள்ளது என்று தெரிவித்தார். திறப்பு விழாவை முன்னிட்டு சிறப்பு சலுகைகளும் இந்த கிளையில் உள்ளது என்று தெரிவித்தார். உடன் தங்க நகை உரிமையாளர் சங்கத் தலைவர், மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## தென்காசி மாவட்டம்

# அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் திமுக துணை பொதுச் செயலாளர் கனிமொழி சூறாவளி பிரச்சாரம்



தென்காசி ஏப்ரல் 13

தென்காசி மாவட்டம் தென்காசி சட்டமன்றத் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலைகதிரவனை ஆதரித்து தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும் திமுக துணை பொதுச் செயலாளருமான கனிமொழி வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார் அப்போது அவர் பேசியதாவது கடந்த ஐந்து ஆண்டுகளில் திமுக மக்களுக்கு செய்த நலத்திட்டங்கள் மற்றும் சாதனைகளை எடுத்துக் கூறினார் மேலும் திமுக திராவிட மாடல் 2.0 ஆட்சிக்கு வந்தவுடன் மகளிர் உரிமைத்தொகை 1000 ரூபாயிலிருந்து 2000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும், அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூபாய் 8000 கூப்பன் வழங்கப்படும் அந்த கூப்பனை கொண்டு அருகில் இருக்கும் கடைக்கு சென்று வீட்டிற்கு தேவையான எந்த பொருளை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம், இரட்டைக்குளம் கால்வாய் திட்டம் உடனடியாக நிறைவேற்றப்படும் தென்காசி மாவட்டத்தில் உள்ள குறைகள் அனைத்தும் நிவர்த்தி செய்யப்படும் அதனால் பொதுமக்கள் அனைவரும் தென்காசி சட்டமன்றத் தொகுதி திமுக வெற்றி வேட்பாளர் மருத்துவர் கலை கதிரவனுக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து அமோக வெற்றி பெற செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார் மேலும் தென்காசி மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் உள்ள திமுக மற்றும் கூட்டணி கட்சிகளை சார்ந்த வேட்பாளர்களை ஆதரித்து வாக்கு சேகரித்து பிரச்சாரம் செய்தார் இந்நிகழ்ச்சியில் தென்காசி சட்டமன்ற தொகுதி திமுக வேட்பாளர் கலை கதிரவன், தென்காசி தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ஜெயபாலன், முன்னாள் தெற்கு மாவட்ட செயலாளர் சிவ பத்மநாதன் ,நெல்லை மேற்கு மாவட்ட செயலாளர் ஆவுடையப்பன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளை சார்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



# இணக்கமாக இருந்தால் தான் தமிழ்நாடு வளர்ச்சிடையும், மத்திய அரசு விமர்சித்தால் எப்படி நிதி கிடைக்கும்?

## எடப்பாடி பழனிச்சாமி கேள்வி?

இணக்கமாக இருந்தால் தான் தமிழ் நாடு வளர்ச்சியடையும் மத்திய அரசை விமர்சித்தால் எப்படி நிதி கிடைக்கும்? என பழனிச்சாமி கேள்வி எழுப்பினார்

தஞ்சாவூர் மாவட்டத்தில் போட்டியிடும் அதிமுக தலைமையில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட் பாளர்களுக்கு ஆதரவு திரட்டும் தேர்தல் பிரச்சாரக் கூட்டம் தஞ்சாவூர் ரெயிலடியில் நடந்தது .

இந்த கூட்டத்திற்கு அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கலந்துகொண்டு அதிமுக வேட்பாளர் சி வி சேகர்(பட்டுக்கோட்டை) மா சேகர்(ஒரத்தநாடு) கோவி .இளங்கோ (பேராவூரணி) சண்முகபிரபு (பாபநாசம்) இளமதி. சுப்பிரமணி யன்(திருவிடைமருதூர்) ஆகியோரு க்கு இரட்டைஇலை சின்னத்திலும், திருவையாறு தொகுதி அ.ம.மு.க. வேட்பாளர் வேலு கார்த்திகேயனு க்கு குக்கர் சின்னத்திலும், தஞ்சை தொகுதி பா.ஜனதா வேட்பாளர் கருப்புமுருகானந்தம், கும்பகோணம் தொகுதி த.மா.கா.வேட்பாளர் அசோக் குமார் ஆகியோருக்கு தாமரை சின்னத்திலும் வாக்கு சேகரித்து பேசினார். அப்போது அவர் பேசியதாவது:

தஞ்சாவூர் என்றால் பொன் விளையும் பூமி. இந்த பூமியை மு க ஸ்டாலின், துணை முதலமைச்சர் ஆக இருந்தபோது ஹைட்ரோகார்ப ன், மீத்தேன் எடுக்க புத்துணர்வு ஒப்பந்தம் போட்டார். அப்படி உங்கள் நிலத்தை அபகரித்தவரின் ஆட்சி தொடர வேண்டுமா? நான் ஒரு விவசாயி, இன்றும் விவசாயம் செய் கின்றேன்

நம்பூமியை மு க ஸ்டாலின் அபக ரித்து பல்வேறு தொழில்களுக்கு கொடுக்க முயற்சித்தார். எம்ஜிஆர் முதலமைச்சராக இருந்தபோது காவேரி பிரச்சனைக்கு கோர்ட்டுக்கு சென்றது. அதைதொடர்ந்து அவருக்கு பின்னர் ஜெயலலிதா, நியாயத்தின் அடிப்படையில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடர்ந்து ஜெயலலிதா இருக்கிற போதே நாம் தீர்ப்பை பெற்றோம் ஆனால் திமுக மத்திய ஆட்சியி ல் இருந்தபோது இதில் கவனம் செலுத்தவில்லை .ஜெயலலிதா தொடர்ந்த வழக்கை நாம் தொடர் ந்து நடத்தி விவசாயிகள் வயிற்றில் பால் பார்க்கும் வகையில் தீர்ப்பு பெற்றோம். விவசாயிகள் கனவை நினைவாக்கியது அதிமுக அரசு. நமக்கு கிடைக்க வேண்டிய நீரை கர்நாடக அரசு திறந்து விட வேண் டும் என்ற தீர்ப்பை பெற்றோம்

அப்போது அ.தி.மு.க பா.ஜனதா கூட்டணி இருந்ததும் அந்த தீர்ப்பை அமல்படுத்த தாமதம் ஆனது. இதனால் விவசாயிகள் கோரிக்கை யின் பேரில் அதிமுகவைச் சேர்ந்த 37 எம்.பி.கள் சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நிறைவேற்றக்கோரி நாடாளுமன்ற த்தை 22 நாட்கள் ஒத்தி வைத்தோம் திமுக அப்படி செய்ததா? நீட்டுக் காக அப்படி குரல் கொடுத்தார்களா ?பா.ஜனதா அரசு துரோகம் செய்கி றது என்கிறார் மு க ஸ்டாலின். அந்த கட்சியோடு தான் நீங்கள் 1999, 2001 தேர்தல்களில் கூட்டணி வைத்து மத்திய அரசிலும் அங்கம் வகித்தீர் கள் அவர்கள் கூட்டணி வைத்ததால் நல்ல கட்சி நாம் கூட்டணி வைத்தால் மத வாத கட்சியா? இதுதான் சந்தர்ப் பவாத அரசியல். அ.தி.மு.க வாக் குகள் சிதறாமல், மக்கள் விரோத ஆட்சியை அகற்றப்பட வேண்டும் என்பதற்காக கூட்டணி வைத்தோம்

ஒத்த கருத்துடன் நாங்கள் இருக்கிறோம். இது இயற்கையான கூட்டணி 15 ஆண்டுகள் மத்தியில் ஆட்சி இருந்த நீங்கள் (திமுக) என் ன திட்டம் கொண்டு வந்தீர்கள்? காவிரி பிரச்சனையை தீர்த்தீர்களா? விவசாயிகளின் நிலத்தை காப்பாற்றியது அ.தி.மு.க. அரசு நீண்ட நாள் காவிரி பிரச்சனைக்கு தீர்ப்பை பெற்றுக் கொடுத்தது அ.தி.மு.க.அரசு, பா.ஜனதா அரசு வஞ்சிப்பதாக சொல்கிறார் மு க ஸ்டாலின். நீங்கள் 15 ஆண்டு கால ம் பல்வேறு மத்திய அரசின் பங்கு வகித்தீர்கள்? தமிழ்நாட்டுக்கு எவ்வளவு நீதி கொண்டு வந்தீர்கள்? குடும்பத்தில் இருப்பார்கள் இடம் பெற வேண்டும். வளம் பெற வேண் டும். கொள்ளையடிக்க வேண்டும் என்பதுதான் அவர்கள் நோக்கம் அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த சிதம்பரம் நிதி மந்திரியாக இருந்த போது கூட நிதி பெற்றுக் கொடுக்க வில்லை .இப்போது திட்டமிட்டு பாஜனதாவை விமர்சிக் கிறார்கள். மத்திய அரசுடன் இணக் கமாக இருந்தால் தான் தமிழ்நாடு வளர்ச்சியடையும் அ.தி.மு.க. ஆட்சியில் மத்திய அரசிடம் வைத்த கோரிக்கைகள் எல்லாம் நிறைவேற்றியது. நெடுஞ் சாலை ,விமான நிலையம், ரயில் பாதை எல்லாம் கொடுத்தார்கள். புதிய ரயில்கள் கொடுத்தனர். இப்போது இணக்கமான சூழல் இல்லை எப்போது பார்த்தாலும் பாஜனதா வை விமர்சித்தால் எப்படி நிதி கிடைக்கும்? பா.ஜனதா, திமுக வெவ்வேறு கொள்கை கொண்ட கட்சிகள். தேர்தல் நடக்கும் வரை வேறுபாடு இருக்கலாம். தேர்தல் முடிந்த பின்னர் மக்களுக்கு நன் மை செய்வது கட்சியின் கடமை. மத்திய அரசுடன் இணக்கமாக இருந்தால் தான் வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியும்.

இந்த 5 ஆண்டு காலம் பல்வேறு பலன்கள் கிடைக்காமல் போனது. மத்திய அரசை குறை சொல்லியே காலத்தை ஓட்டிவிட்டனர். கருப்பு பலூன் விட்ட மு க ஸ்டாலின். இப்போது மோடிக்கு வெள்ளை குடை பிடிக்கிறார். ஆளுகின்ற போது ஒரு நிலை, எதிர்க்கட்சியாக இருக்கும் போது ஒரு நிலை என்று இரட்டை வேடம் போடுகிறார்

அ.தி.மு.க. ஆட்சியில் இயற்கை சீற்றத்தால் பாதிப்பு ஏற்பட்டதும் உடனுக்குடன் நிவாரணம் கொடுத்தோம். அ.தி.மு.க.ஆட்சியில் 2 முறை பயிர் கடன் தள்ளுபடி செய்யப்பட்ட து .சென்ற ஆண்டு மழையில் நெற் பயிர்கள் அழுகிப்போனது .அதை நேரில் வந்து மு க ஸ்டாலின் பார்க்கவில்லை

தேர்தலில் ஓட்டு தேவை என்பதால் ஓடோடி வருகிறார். அ.தி.மு.க .ஆட்சி இருக்கும் வரை குறுவை சாகுபடிக்கு காப்பீடு செய் தோம் .மீண்டும் அ.தி.மு.க. ஆட்சி க்கு வந்தவுடன் பயிர் கடன் ரத்து செய்யப்படும் .மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம். இவ்வாறு அவர் பேசினார்

## சென்னையில்

# 'வி' தொலை தொடர்பு நிறுவனத்தின் 5G சேவை அறிமுகம்




சென்னை, ஏப்ரல் 13,

இந்தியாவின் முன்னணி தொலைத்தொடர்பு நிறுவனமான 'வி', சென்னையில் தனது 5G சேவைகளை தொடங்கியுள்ளது. இந்தியா முழுவதும் உள்ள 'வி' வாடிக்கையாளர்களுக்கு அதிவேகமான இணைய இணைப்பை வழங்குவதற்கான நிறுவனத்தின் உறுதிப்பாட்டில் இது ஒரு முக்கிய மைல் கல்லாகும். இந்த அறிமுகத்தின் மூலம், இந்தியாவின் டாப் டேட்டா சந்தைகளில் தனது செயல்பாடுகளை வலுப்படுத்தும் வகையில் ஏற்கனவே உள்ள 50 நகரங்களுடன் சேர்த்து, மும்பை, டெல்லி, பெங்களூரு, கொல்கத்தா மற்றும் சென்னை ஆகிய ஐந்து மெட்ரோ நகரங்களிலும் இப்போது வி' 5G சேவை கிடைக்கிறது.

வி' 5G சேவையின் இந்த விரிவாக்கம் குறித்து 'வி' நிறுவனத்தின் தமிழ்நாடு மண்டல வணிகத் தலைவர் சாய் வெங்கட்ராமன் கூறுகையில்,'

இந்த மாத தொடக்கத்தில், இந்தியா முழுவதும் மேலும் 90 நகரங்களை இணைக்கும் திட்டத்தை நிறுவனம் அறிவித்திருந்தது. இந்த விரிவாக்க நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தமிழகத்தில் மே மாதம் 2026க்குள் கோயம்புத்தூர், திருச்சி, சேலம், திருப்பூர், வேலூர் மற்றும் யூனியன் பிரதேசமான புதுச்சேரிக்கும் வி தனது 5G சேவைகளை விரிவாக்கம் செய்யவுள்ளது.

வி' 5G சேவையின் இந்த விரிவாக்கமானது. 17 முன்னுரிமை வட்டாரங்களில் (Priority circles) உள்ள 133 நகரங்களுக்கு தனது சேவையை விரிவுபடுத்தும் வியின் ஒட்டு மொத்த 5G திட்டத்தின் ஒரு பகுதியாகும். இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் உள்ள தொழில் மையங்கள். அதிக டேட்டா பயன்பாடு கொண்ட இடங்கள் மற்றும் வளர்ந்து வரும் நகர்ப்புறங்களுக்கு" வி" அதிக முக்கியத்துவம் கொடுத்து வருகிறது. முக்கிய தொழில் நகரங்களான கோவை, சேலம், திருப்பூர்: மருத்துவம் மற்றும் கல்வியில் முக்கியத்துவம் பெற்ற மையமான வேலூர், கல்வி மற்றும் வணிக மையமான திருச்சி, புதுச்சேரி ஆகிய நகரங்களில் விரிவுப்படுத்தப்பட்டிருக்கும் 'வி' 5G சேவையானது, 'வி' நிறுவனம் தனது வாடிக்கையாளர்களுக்கும் மருத்துவம், கல்வி, தொழில்துறை ஆகியவற்றின் முன்னேற்றங்களுக்கு காட்டிவரும் அணுகுமுறையையே பிரதிபலிக்கிறது என்று கூறினார்.

# வேடபட்டியில் மீண்டும் அம்மா மினி கிளினிக் தொடங்கப்படும்

## வீதி வீதியாக அதிமுக வேட்பாளர் வாக்கு சேகரிப்பு



விளாத்திகுளம் ஏப்ரல் 13.

தேசிய ஜனநாயக கூட்டணி கட்சியின் சார்பாக தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளராக போட்டியிடும் சத்யா குறளையம்பட்டி, ஓ.லட்சுமிநாராயணபுரம், லக்கம்பட்டி, மாமுநைனார்புரம், விருசம்பட்டி, வேடபட்டி, நெடுங்குளம், கனிமார்கூட்டம், ராமசாமிபுரம், மாதராஜபுரம், ரெட்டியாபட்டி, அரியநாயகிபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இரட்டை இலை சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார்.

அப்போது வேட்பாளர் சத்யா பேசுகையில் கடந்த அதிமுக ஆட்சியில் மக்களின் உடல் நிலையை கருத்தில் கொண்டு வேடபட்டி கிராமத்தில் அம்மா மினி கிளினிக் திறக்கப்பட்டது. பின்பு திமுக ஆட்சி வந்தவுடன் அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக அம்மா கிளினிக் மூடப்பட்டது இதனால் இப்பகுதியில் உள்ள மக்கள் ஒரு அவசர மருத்துவ சிகிச்சை பெற முடியாமல் தவித்து வருகின்றனர், மீண்டும் அதிமுக ஆட்சி வந்த உடன் வேடப்பட்டி கிராமத்தில் அம்மா கிளினிக் மீண்டும் திறக்கப்படும் என வாக்குறுதி அளித்தார்.

இந்நிகழ்வில் விளாத்திகுளம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் சின்னப்பன், கிழக்கு ஒன்றிய செயலாளர் ராமச்சந்திரன், முன்னாள் கவுன்சிலர் பெருமாள்சாமி மற்றும் அதிமுக, தேசிய ஜனநாயககட்சி கூட்டணி கட்சியினர் என பலர் கலந்து கொண்டனர்.

# முதியோர் மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க ஏற்பாடு

தஞ்சாவூர் ஏப்ரல் 13

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள 8 சட்டப்பேரவை தொகுதிகளிலும் வருகின்ற சட்டப்பேரவை தேர்தலில் 85 வயதுக்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் வீட்டிலிருந்தே வாக்களிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியரும் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலருமான பிரியங்கா பங்கஜம் தெரிவித்து ள்ளார்

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்து இருப்பதாவது

தமிழ்நாடு சட்டப்பேரவை பொது தேர்தலுக்கான வாக்குப்பதிவு தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள 8 சட்டப்பேரவை தொ கு தி க் கு ள் ப ட் ட அனைத்து வாக்குச்சாவடி நிலைய ங்களிலும் ஏப்ரல் 23ஆம் தேதி காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெற உள்ளது. இதில் , வாக்குப்பதிவு நாளன்று வாக்குச்சாவடிக்கு சென்று வாக்களிக்க இயலாத 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 40 சதவீதம் மேல் உடல் பாதிப்புடை ய மாற்று திறனாளி வாக்காளர்களு க்கு அவர்களது வீட்டில் இருந்த வாரே தங்களது வாக்கை பதிவு செய்ய இந்திய தேர்தலை ஆணையத்தால் அறிவுரை வழங்கப்பட்டு ள்ளது

இதன்படி, தஞ்சாவூர் மாவட்டத் தில் உள்ள 8 சட்டபேரவை தொகுதிகளிலும் வீட்டிலிருந்தே வாக்களிக்க படிவம் 12 டியில் விருப்பம் தெரிவித் த வ ர் க ளு க் கு திங்கட்கிழமை ஏப்ரல் 13 முதல் தொடர்புடைய தேர்தல் நடத்தும் அலுவலர்களால் நியமனம் செய்யப்பட்ட வீட்டு வாக்கு பதிவு குழு வருகை புரிய உ ள் ள து

அக்குழு வருகை புரியும்போது வாக்காளர் எவ ரேனும் படிவம் 12 டி யில் குறிப்பிட்டுள்ள முகவரி இல்லையெனில் ,இரண்டாவது முறை வருகை தரும் நேரம் குறித்து வாக்காளருக்கு அக்குழுவினரால் தகவல் வழங்கப்படும் .அதே நேரத் தில் இரண்டாவது முறை குழு சென்ற போதும் வாக்காளர் இல்லாவிட்டால் ,எந்த ஒரு வாய்ப்பு ம் வாக்காளருக்கு மீண்டும் தர இ ய ல ா து



எனவே தஞ்சாவூர் மாவட்டத் திலுள்ள 8 சட்டப்பேரவை தொகுதி களிலும் உள்ள படிவம் 12 டியில் வீட்டிலிருந்து வாக்களிக்க விருப்ப ம் தெரிவித்த 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் மற்றும் 40 சதவீதம் மேல் உடல் பாதிப்புடைய மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் தங்களது வாக்கை வீட்டிலிருந்த வாறே செலுத்தும் வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளலாம்.

## கிருஷ்ணகிரியை அடுத்த வரட்டம்பட்டி

# நேஷனல் மெட்ரிகுலேஷன் பள்ளியின் 26வது ஆண்டு விழா




கிருஷ்ணகிரி ஏப்ரல் 13

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் அருகே வரட்டம்பட்டி நேஷ்னல் மெட்ரிகுலேஷன் பள்ளியின் 26வது ஆண்டு விழா கலை நிகழ்ச்சிகளுடன் வெகு சிறப்பாக நடைபெற்றது. பள்ளியின் தலைவர் பி டி. சுந்தரேசன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியில் இயக்குனர்கள் சுகுமார், இளங்கோவன், கே. ஜி.எம் ஜாவித்கான், இளங்கோ, அன்புமணி, சேகர், பள்ளியின் முதல்வர் எஸ்.முருகன், துணை முதல்வர் ஹரிபிரபு, நிர்வாக அலுவலர் சரவணன், ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆண்டு விழாவை முன்னிட்டு பேச்சு போட்டி, கட்டுரை போட்டி, பாட்டு போட்டி, உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பள்ளியின் தலைவர் பி.டி.சுந்தரேசன் நினைவு பரிசுகளை வழங்கினார். பின்னர் மாணவர்கள் முன்பு பேசிய தலைவர், கல்வி ஒன்று தான் அனைவருக்கும் சிறந்த வழிகாட்டி எனவும், மாணவர்கள் நவீன காலத்திற்கு ஏற்ப தங்களை மாற்றிக் கொண்டு படிப்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும், உங்களுக்கு கல்வித் திறனை வளர்த்துக் கொள்ள ஆசிரியர்கள் அயராது பாடுபட்ட வந்தாலும் மாணவர்கள் தங்கள் கடமையை சரிவர செய்தால் தான், லட்சியத்தை அடைய முடியும் எனவும், இன்று நீங்கள் தலைகுனிந்து படித்தால் நாளை நீங்கள் தலைநிமிர்ந்து வாழலாம் என அறிவுரை வழங்கினார். இதைத்தொடர்ந்து கண்களுக்கும் செவிகளுக்கும் விருந்தாக பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.மாணவ,மாணவிகள்வண்ணமயமானஉடைகளை அணிந்து நடன நாட்டிய நிகழ்ச்சியில் பங்கேற்றது அங்கு கூடி இருந்த பெற்றோர்களுக்கு விருந்தாக அமைந்திருந்தன. பக்தி பாடலுக்கு மாணவிகள் ஆடிய நடனம் சினிமாவை மிஞ்சும் அளவிற்கு இருந்ததாகவும், இது போன்ற கலை நிகழ்ச்சிகளால் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும் புத்துணர்வாக இருந்ததாகவும், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் தெரிவித்தனர். 26வது பள்ளியின் ஆண்டு விழாவில் ஆசிரியர் பெருமக்களும், பெற்றோர்கள், பொதுமக்கள், என 5000க்கும் மேற்பட்டோர் இந்த ஆண்டு விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## காட்பாடி பகுதியில்

# துரைமுருகன் தீவிர பிரச்சாரம் குழந்தைகளுக்கு இனிப்பு வழங்கினார்



வேலூர் : ஏப்ர13

வருகிற 23ஆம் தேதி தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் நடைபெற உள்ளது . நாட்கள் நெருங்க நெருங்க பிரச்சாரமும் சூடு பிடித்து உள்ளது இதுபோல வேலூரில் வெயிலின் தாக்கமும் சூடு பிடித்து உள்ளது இந்த வெயிலையும் பொருட்படுத்தாமல் வேட்பாளர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்

காட்பாடி சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளரும் திமுகவின் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் இன்று பாரதி நகர், குளக்கரை, பழைய காட்பாடி உள்ளிட்ட பகுதிகளில் பிரசாரம் மேற்கொண்டார்

அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்தும் மலர் தூவியும் உற்சாக வரவேற்பு அளித்தனர்

அப்போது துரைமுருகன் சிறுமியர்களுக்கு சாக்லேட் அளித்து மகிழ்ந்தார்

இரு சக்கர வாகன பேரணி நடைபெற்றது இந்த பிரச்சாரத்தின் போது துரைமுருகன் பேசியதாவது

பாரதி நகர் பகுதியில் தற்போது 75 லட்சம் செலவில் சுகாதார நிலையமும் உடற்பயிற்சி கூடம் புதிய நியாய விலை கடை குடிநீர் சுத்திகரிப்பு போன்றவை கட்டப்பட்டுள்ளன மேலும் கோடிக்கணக்கில் கால்வாய் சீரமைப்பு செய்யப்பட்டுள்ளது இந்த பகுதியில் 37 ஆயிரம் பேர் மகளிர் திட்டத்தின் கீழ் ரூபாய் 1000 பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் ஆட்சிக்கு வந்ததும் அவர்களுக்கு 2000 ஆக வழங்கப்பட உள்ளது மகளிர் உரிமைத் தொகை கிடைக்காதவர்களுக்கும் வழங்கப்படும் என்றார்

## திருச்சியில்

# ஆயுதத்துடன் வீலிங் செய்த வாலிபர் கைது



திருச்சி, ஏப். 13

திருச்சி டிவிஎஸ் டோல்கேட் அருகே கடந்த ஏப்ரல் 10 ஆம் தேதி பைக்கில் கூர்மையான ஆயுதத்துடன் வாலிபர் ஒருவர் சென்ற வீடியோ வைரலானது. இந்த சம்பவத்தை அடுத்து, கண்டோண்மெண்ட் போலீசார் வாகனத்தின்பதிவு எண்ணைக்கொண்டு விசாரணை நடத்தி, பாலக்கரை பகுதியைச் சேர்ந்த அர்ஜுன் (29) என்பவரை கைது செய்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



## குமரி மாவட்டத்தில்

# மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்களுக்கான தபால் வாக்குப்பதிவு துவங்கியது

நாகர்கோவில், ஏப்.13

கன்னியாகுமரி மாவட்ட த்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள மாற்றுத்திறனாளிகள் மற்றும் 85 வயதுக்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் வீட்டிலிருந்தே வாக்களிக்கும் வகையில் வாக்காளர்களின்வீடுகளுக்குசென்று வாக்கு பதிவு மேற்கொள்ளும் பணி நேற்று காலை 7 மணிக்கு தொடங்கி நடைபெற்று வருகிறது.

அதன் ஒரு பகுதியாக குளச்சல் சட்டமன்றத்திற்குட்பட்ட உடையார் விளை பகுதியில் வசிக்கும் 65 வயது நிரம்பிய மாற்றுத்திறனாளி கோமதி என்பவரும்,

நாகர்கோவில் சட்டமன்றத்திற்குட்பட்ட பெருவிளை பகுதியில் வசிக்கும் 40 வயது நிரம்பிய மாற்றுத்திறனாளி சிவசங்கரன் என்பவரும் வாக்குப்பதிவு செலுத்துவதை மாவட்ட ஆட்சியர் அழகு மீனா நேரில் பார்வையிட்டார்.

இந்த தபால் வாக்குப்பதிவானது நேற்று துங்கி இன்று (13.04.2026) மற்றும் நாளை 14.04.2026 வரை நடைபெறும்.

நடைபெற்ற ஆய்வில் நாகர்கோவில் வருவாய் கோட்டாட்சியர் செல்வி. எஸ்.காளீஸ்வரி, கல்குளம் வட்டாட்சியர் சுனில், தனி வட்டாட்சியர் சேகர், துறை அலுவலர்கள், தேர்தல் பணியாளர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.



# பஸ் பயணிகளுக்கு துண்டு பிரசுரம் வழங்கி ஓட்டு சேகரித்த, பர்கூர் தி.மு.க., வேட்பாளர்

பர்கூர், ஏப். 12:

பர்கூர் அருகே பஸ் பயணிகளுக்கு, தி.மு.க., அரசின் சாதனை துண்டு பிரசுரங்களை வழங்கி அத்தொகுதி வேட்பாளர் மதியழகன் எம்.எல்.ஏ., ஓட்டு சேகரித்தார். கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் சட்டசபை கொகுதிக்குட்பட்ட சின்ன செட்டிப்பள்ளி, பி.ஆர்.ஜி.,மாதேப்பள்ளி, அழகியபுதுார், கோனேரிகுப்பம், ராமன்கொட்டாய், சீகலஹள்ளி குடியிருப்பு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வேன் பிரசாரம் மேற்கொண்டார். செட்டிப்பள்ளி அருகே எதிரில் வந்த அரசு டவுன் பஸ்சில் ஏறிய மதியழகன் எம்.எல்.ஏ., தி.மு.க., அரசின் சாதனைகள் அடங்கிய துண்டு பிரசுரங்களை வழங்கி பயணியரிடம் ஓட்டு சேகரித்தார். செட்டிப்பள்ளியில் பொதுமக்களிடம் அவர் பேசியதாவது:

தமிழகத்தில், தி.மு.க., ஆட்சியில் செய்த திட்டங்களை, நாடு முழுவதுமுள்ள மாநிலங்கள் பின்தொடர்ந்து வருகின்றன. உங்கள் பகுதியில்நான்பேசும்இடத்தை சுற்றி பாருங்கள். இங்கேயே சாலை, மின் விளக்கு, பள்ளி கட்டடம் என திட்டங்களை ஒரு எம்.எல்.ஏ.,வாக வழங்கி உள்ளேன்.

பர்கூர் தொகுதியின் நீண்ட கால கோரிக்கைகளான பஸ் ஸ்டாண்டு, ரேஷன்கடைகள், துணை சுகாதார நிலையங்கள், உள்ளிட்ட ஏராளமான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன. தமிழகத்தில், தமிழ்புதல்வன், புதுமைப்பெண், நான் முதல்வன், மகளிர் உரிமைத்தொகை, மகளிர் விடியல் பயணம், உள்ளிட்ட திட்டங்களை தந்தது,

தி.மு.க., வரும் ஆட்சியில், மகளிருக்கு, 2,000 ரூபாய் வழங்க உள்ளது தி.மு.க., திராவிட மாடல் 2.ஓ., ஆட்சி வந்தவுடன் பொதுமக்களுக்கு, 8,000 ரூபாய் வழங்கி உங்களுக்கு தேவைப்படும் பொருட்களை வழங்க உள்ளதும், தி.மு.க., அரசு.

எனவே மக்கள் சிந்திக்க வேண்டும். திட்டங்களை வாரி தந்த தி.மு.க., கூட்டணிகட்சிகளை ஆதரிக்க வேண்டும். வரும், சட்டசபை தேர்தலில், 200 தொகுதிகளுக்கு மேல் வென்று, முதல்வர் ஸ்டாலினை மீண்டும் ஆட்சி அரியணையில் அமர வைக்க வேண்டும் என அவர் பேசினார்.

# கோவையில் நைனா பிரியாணி கடை திறப்பு விழா



கோவை, ஏப். 13

கோவை மாநகர மையப் பகுதியான ரயில் நிலையம் அருகில் நைனா பிரியாணி கடை 10வது கிளை திறப்பு விழா,உரிமை யா ளர் அஜய் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார்.திறந்து வைத்து பேசிய அவர் எங்களது பிரியாணியானது தரத்துடனும், நடுத்தர மக்களும் வாங்கக்கூடிய அளவில் விலை குறைவாக வும், உள்ளது என்று தெரிவித்தார்.

மேலும் திறப்பு விழாவை முன்னிட்டு ஒரு பிரியாணி ரூ 49,சில்லி ரூ 49 இன்று ஒரு நாள் மட்டும் என்று தெரிவித்தார். பொது மக்கள் எங்களுக்கு தொடர்ந்து ஆதரவு தருவதால் நாங்கள் அடுத்த அடுத்த கிளை திறப்பதற்கு காரணம் என்று தெரிவித்தார்.

## திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி

# திமுக வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரிப்பின்போது எலவம்பட்டி ஊராட்சியில் பிரமாண்ட வரவேற்பு



திருப்பத்தூர்:ஏப்:13,

திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி மத்திய ஒன்றியத்திற்கு உட்பட்ட எலவம்பட்டி ஊராட்சியில் திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி திமுக வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரித்தார்.

வாக்கு சேகரிப்பின் போது கந்திலி மத்திய ஒன்றிய செயலாளர் மாவட்ட கவுன்சிலர் மாவட்ட திட்ட குழு உறுப்பினர் வழக்கறிஞர் குணசேகரன், ஒன்றிய பெருந்தலைவர் திருமதி திருமுருகன், கூட்டணி கட்சியான விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மண்டல தெர்தல் பொறுப்பாளர் சுபாஷ் சந்திரபோஸ், தேமுதிக மாவட்ட துணை செயலாளர் சரவணன்,ஒன்றிய துணை செயலாளர் வழக்கறிஞர் மாது, தீபா, ஒன்றிய ஆதிதிராவிடர் நலக் குழு அமைப்பாளர் பாலு, காங்கிரஸ் கட்சி ஒன்றிய தலைவர்சாந்தசீலன் ஆகியோர், ஊராட்சி மன்ற தலைவர் மேனகா விவேகானந்தன் ஆகியோர் உதய சூரியன் சின்னத்திற்கு வாக்கு சேகரித்தனர்.

திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளர் நல்லதம்பி வாக்கு சேகரிக்கையில், திருப்பத்தூர் சட்டமன்றத் தொகுதியில் பல்வேறு திட்டங்களை நிறைவேற்றி உள்ளது. குடிநீர், சாலை வசதி, கால்வாய்,

மேலும் தமிழ்நாடு முதலமைச்சரின் மகளிர் உரிமைத் தொகை, நான் புதல்வன்திட்டம்,தாயுமானவர் திட்டம், கலைஞர் கனவு இல்லம் உள்ளிட்ட சாதனைகளை திராவிட மாடல் அரசு செய்துள்ளது என குறிப்பிட்டு பேசினார். முன்னதாக கந்திலி மத்திய ஒன்றிய கலை இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை ஒன்றிய அமைப்பாளர்

முனைவர்ரஜினிபொன்னாடை போர்த்தி மாலை அணிவித்தார். இந்நிகழ்ச்சியில் தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர் காளியப்பன், வெங்கடப்பன் BL2 முருகேசன், வெங்கடேசன்,BDA கோகுல், BLC தாமரைச்செல்வி, ரவிக்குமார், ஆறுமுகம்,ரூபினி , தேவி,அருண், மாது, மதிவாணன், திருமுருகன், விசிக ஒன்றிய செயலாளர் சங்கர், முகாம் அமைப்பாளர் வேலு, தேமுதிக திருஞானம், திமுக பிரமுகர்கள் மற்றும் கூட்டணி கட்சி பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். மேள, தாளத்துடன் பிரமாண்ட வரவேற்பு அளித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## தருமபுரி சட்டமன்றத் தொகுதியில்

# பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பு



தருமபுரி ஏப்ரல் 13

தருமபுரி சட்டமன்ற தொகுதியில் தேசிய ஜனநாயக கூட்டணி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். மேலும் உழவர் சந்தை, குமாரசாமிபேட்டை, அண்ணா நகர், எம்ஜிஆர் நகர் மற்றும் தருமபுரி நகரத்தில் உள்ள பகுதிகளில் வேட்பாளர் சௌமியா அன்புமணி மாம்பழம் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்தார். அப்போது அவருக்கு பெண்கள் ஆரத்தி எடுத்து உற்சாக வரவேற்பு அளித்தனர்.

இதைத் தொடர்ந்து அவர் கூறியதாவது. காவேரியிலிருந்து கடலில் கலக்கும் உபரி நீரை மீன் மோட்டார் மூலம் ஏரி, குளம் ஆகியவைகளில் நிரப்ப நடவடிக்கை எடுக்கப்படும் . சிப்காட் பணி நிறைந்து செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். தருமபுரி முதல் மொரப்பூர்வரைரயில்வே பணி விரைந்து முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். பாமக மாவட்ட செயலாளர் எஸ். பி. வெங்கடேஸ்வரன், பாரதிய ஜனதா மாவட்ட தலைவர் சரவணன், அமமுக மாவட்ட செயலாளர்டி.கே.ராஜேந்திரன், அதிமுக நகர செயலாளர் பூக்கடை ரவி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள், பொதுமக்கள் உடனிருந்தனர்.

## தருமபுரியில்

# தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட சௌமியா அன்புமணி மகள்கள்



தருமபுரி ஏப்ரல் 13

தருமபுரி சட்டமன்ற தொகுதியின் தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் போட்டியிடும் பாமக வேட்பாளர் சௌமியா அன்புமணி தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். அவருக்கு செல்லும் இடங்களில் ஏராளமான பெண்கள் திரண்டு ஆதரவு தெரிவித்து வருகின்றனர். இந்தநிலையில்சௌமியா அன்புமணியின் மகள்களான சங்கமித்ரா, சஞ்சுத்ரா ஆகிய இரண்டு பேரும் தருமபுரி நகரில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டனர். குமாரசாமி பேட்டை பகுதியில் வீடு வீடாகச் சென்று அவர்கள் துண்டு பிரசுரங்களை வழங்கி மாம்பழம் சின்னத்திற்கு ஆதரவு திரட்டினார். செல்லும் இடங்களில் பெண்கள் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். அப்பொழுது தனது தாயாரை வெற்றி பெற செய்தால் பெண்களின் உரிமைகளுக்காக குரல் கொடுப்பார் நாளுக்கு நாள் பெண்களுக்கு பாதுகாப்பு கேள்விக்குறியான நிலையில் அவர்களுக்கு முழு பாதுகாப்பு வழங்க தொடர்ந்து போராடுவார் என்றுகூறினார்கள். பாமக நகரச் செயலாளர் வெங்கடேசன் ,மாவட்ட நிர்வாகி டி.ஜி. மணி மற்றும் கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.